செய்தி வெளியீடு எண்:473 நாள்:20.07.2021

## செய்தி வெளியீடு

**"தமிழ்நாட்டில் அடுத்த பத்தாண்டுகளுக்குள் கூடுதலாக 11.75 இலட்சம் எக்டேர் பயிரிடச் செய்து, தற்போதுள்ள நிகர சாகுபடிப் பரப்பான 60 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காடு உயர்த்திட வேண்டும்" - வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தல்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (20.07.2021) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாட்டில் அடுத்த பத்தாண்டுகளுக்குள் கூடுதலாக 11.75 இலட்சம் எக்டேர் பயிரிடச் செய்து, தற்போதுள்ள நிகர சாகுபடிப் பரப்பான 60 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காடு உயர்த்தவும், இருபோக சாகுபடி நிலங்களை 10 இலட்சம் எக்டேரிலிருந்து 20 இலட்சம் எக்டேராக உயர்த்தவும், கிராம வாரியாக நிலங்களைக் கணக்கெடுத்து, சாகுபடிக்குத் தேவையான அனைத்து பாசன வசதிகளையும் உருவாக்கித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

விவசாயிகளின் தேவைக்கேற்ப, விதைகள், இரசாயன உரங்கள் போன்ற வேளாண்மை இடுபொருட்களை இருப்பு வைத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் விரிவாக்கப் பணிகள் தொய்வின்றி விரைந்து மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், பருத்தி, சூரியகாந்திப் பயிர்களில், உரிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றி, இப்பயிர்களின் உற்பத்தித்திறனை உயர்த்தி, அகில இந்திய அளவில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகம் இடம்பிடிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

விவசாயிகளின் வயல்களில் மழைநீரினைச் சேமிக்க பண்ணைக்குட்டைகள், தொகுப்பு அணுகுமுறையில் நுண்ணீர்ப் பாசனத்திட்டம், விவசாயிகளை ஒருங்கிணைத்து, சிறுதானியங்களில் சிறப்பு இயக்கம், இயற்கை விவசாய முறையினைப் பிரபலப்படுத்துதல், தோட்டக்கலை பயிர்களுக்குத் தனிக்கவனம் செலுத்திட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைப்பதற்கு மின்னணு ஏல முறை அறிமுகம் செய்தல், ஒரு மாவட்டம் - ஒரு விளைபொருள் என்ற அணுகுமுறையின்படி, உற்பத்தியை உயர்த்தி, அதற்கான மதிப்புக்கூட்டும் தொழிற்சாலைகளை உருவாக்குதல், படித்த இளைஞர்களை வேளாண்மையில் ஈடுபடுத்தி, வேளாண் தொழில் முனைவோர்களாக உருவாக்குதல், அனைத்து கிராம வேளாண் மறுமலர்ச்சித் திட்டம் போன்ற தொலைநோக்குத் திட்டங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

அபரிதமாகக் கிடைக்கும் சூரிய சக்தியைப் பாசனத்திற்குப் பயன்படுத்திட ஏதுவாக அதிகளவில் சூரியசக்தி பம்புசெட்டுகள் நிறுவ வேண்டும் என்றும், உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களைச் செயல்விளக்கங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

தமிழ்நாட்டில் தோட்டக்கலை பயிர்களில் உற்பத்தியை உயர்த்தவும், தமிழக மக்களின் வசதிக்காக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இயங்கிவரும் அரசு தாவரவியல் பூங்காக்களை நன்கு பராமரிக்க வேண்டும் என்றும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்குச் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும், விளைபொருட்களைச் சேமித்து வைப்பதற்கு ஏதுவாக சேமிப்புக் கிடங்குகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

தமிழகத்தில் ஏற்கெனவே துவங்கப்பட்ட அனைத்து உழவர் சந்தைகளும் நல்ல முறையில் இயங்கவும், இந்த நிதியாண்டில் புதிய உழவர் சந்தைகளை உருவாக்கவும், செயல்படாமல் இருக்கும் உழவர் சந்தைகளை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தற்போது விவசாயப் பணிகளுக்குப் போதிய அளவு ஆட்கள் கிடைக்காத காரணத்தாலும், விவசாய உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும், வேளாண் பொறியியல்துறை மூலம் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்க ஏற்பாடு செய்தல் மற்றும் புதிய இயந்திரங்கள் / வாகனங்களை மானியத்தில் வழங்குதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை செயலாளர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் முனைவர் மா.வள்ளலார், இ.ஆ.ப., வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் திரு. த. ஆபிரகாம், இ.ஆ.ப., வேளாண்மைத்துறை இயக்குநர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை இயக்குநர் முனைவர் இரா.பிருந்தா தேவி, இ.ஆ.ப., வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை இணைச் செயலாளர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., வேளாண்மைப் பொறியியல் துறை முதன்மைப் பொறியாளர் முனைவர் இரா. முருகேசன், முதன்மைப் பொறியாளர் (நதிப் பள்ளத்தாக்கு) திரு. த. சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9